கீழ்குந்தா பேரூராட்சிக்குத் தேர்தல்

*109 வினா.—திரு. கே. போஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள கீழ்குந்தா பேரூராட்சிக்கு உடனடியாக தேர்தல் நடத்த, அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம். கீழ்குந்தா பேரூராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்தல் நடத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மதுரை மத்திய சிறையில் கைதியின் மரணம்

*110 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலையில் 17—7—1968 அன்று ஒரு கைதி இறந்தாரா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை என்ற பெயரால் இப்போது காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகளைப் பார்த்தால், காவல் நிலையங்கள் எல்லாம் கசாப்புக்கடைகளாக மாறிவருகின்றன. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் கூறக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகள் முன்பு பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்த முறைகள் போலவே . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் குற்றச்சாட்டுதான். குறை சொல்வதற்கு வேறு நேரம் இருக்கிறது. கேள்வி நேரத்தில் கேள்விகள்தான் கேட்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, மதுரையில் ஒரு தொழிலாளி திருடினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, காவல் நிலையத்தில் அடிபட்டு இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய சிறைச்சாலையில் ஒரு கைதி இறந்தாரா என்பது மூலக் கேள்வி. காவல் நிலையத்தில் இறந்தார் என்று அங்கத்தினர் கூறுவதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு கேள்விகள் கேட்கக்கூடாது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Posts of Police Constables.

* 91 Q.—DR. H. V. HANDE :
THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) the date from which the recruitment to the posts of constables has been temporarily suspended; and

(b) the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) காவலர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பது 14—12—1967 முதல் 28—7—1968 வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

(இ) தமிழ்நாட்டுச் சிறப்புக் காவல் படை கலைக்கப் படவிருந்ததால் அதில் எச்சாகவிருந்த காவலர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்காகப் பதவிகளைக் காலியாக வைத்திருக்கும் நோக்கத்துடன் காவலர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பது நிறுத்தப் பட்டது.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் உத்தியோக உயர்வு பெற்றவர்கள் மீண்டும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பரவலாகப் பேசப்படுகிறதே, உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, போலீஸ் படையுடன், மலபார் தனிக் காவல் படையை இணைக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுதான் இது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state how many constables were recruited after the temporary bar?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 641 பேர்.

திரு. ந. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் அட்டெண்டர் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைத்தான் எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. நாட்டிலே லட்சக்கணக்கான பேர்கள் S.S.L.C படித்துவிட்டு வேலைவாய்ப்புகள் இன்றி இருக்கின்றார்கள். ஆகவே, காவலர் பணிக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் இருக்கும் என்பதை உணர்ந்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களையே எடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவலர் பணிக்கென தனிப்பட்ட சில தகுதிகள் இருக்கின்றன. காவலர் பணிக்கு கல்வித் தகுதி 8-வது படிவம் இருந்தால் போதும். தனிப்பட்டதகுதிகளாக உயரம் 128 செ.மீ. இருக்க வேண்டும்,